# முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
# முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி.

O.S. No. 173/2021

பெயர் :– சரவணன் (P.W.–1)
த/பெ. :– பாலகிருஷ்ணன்
தேதி :– 24.11.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
குறுக்கு விசாரணை

என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பணம் கொடுத்தனை திரும்பக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் உள்ள தாவா சொத்தானது பாஸ்கரன் மனைவி அமுதா என்பவருக்கு சொந்தமானதா என்றால் என்னிடம் பிரதிவாதி தனக்கு சொந்தம் எனக்கூறி முன்பணம் வாங்கினார். தாவா சொத்தை பொறுத்து பாஸ்கரன் மனைவி அமுதாவிடமிருந்து பிரதிவாதி பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கியுள்ள விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது பிரதிவாதிக்கு சொந்தம் என சொல்லி விற்பதாக கூறினார் என்றால் சரிதான். தாவா சொத்தினை விலைக்கு வாங்கும் முன்னர் தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் மற்றும் மூலப்பத்திரம் வாங்கி பார்த்தீர்களா என்றால் எதுவும் என்னிடம் காண்பிக்கவில்லை. தாவா சொத்தினை பிரதிவாதி எந்த காலத்திலும விற்பதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் வழக்குரையில் சொல்லியுள்ளவாறு எந்த காலத்திலும் கிரயத்தொகை நிர்யணம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை ரூ.23,10,000/–ற்கு கிரயம் பெறுவதாக ஒப்புக்கொண்ட நிலையில் கிரய உடன்படிக்கை உங்களுக்குள் ஏற்பட்டதா என்றால் கைப்பட எழுதிக்கொடுத்துள்ளார். அதனை பதிவு செய்தீர்களா என்றால் இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் சொத்து கிரயம் சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் தாவா சொத்தினை பிரதிவாதி எந்த காலத்திலும் விற்பதாக என்னிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி ஸ்ரீகண்டபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றிய விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியும். பிரதிவாதி பணிஓய்வு பெற்றுவிட்டார் என்பதால் வழக்கு விபரம் நன்றாக தெரியும் என்றால் சரிதான். அதனால் வழக்கு சொத்து தனக்கு சொந்தம் என்று சொல்வதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவரது சொத்து என்று சொல்லிதான் என்னிடம் விற்றார்.

தாவா சொத்திற்கு முன்பணம் பெறும்போது ஏதேனும் கைரசீது எழுதிக்கொடுத்தாரா என்றால் எழுதிக்கொடுத்துள்ளார். வா.சா.ஆ1 ஆன 19.03.2018ல் எழுதிக்கொடுத்ததாக தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் இல்லை என்று சொன்னாலும், பிரதிவாதி அந்த கைகடிதம் கைப்பட எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் தான் கைப்பட

எழுதிக்கொடுத்து கையொப்பம் செய்தார். என்னால் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு 17.04.2018 அன்று அனுப்பப்பட்ட அறிவிப்பு அசல் **பி.வா.சா.ஆ.1** என குறியீடு செய்யப்படுகிறது. நான் அனுப்பிய அறிவிப்புக்கு 02.05.2018ல் பிரதிவாதி எனக்கு அனுப்பிய பதிலறிவிப்பு அசல் **பி.வா.சா.ஆ.2** என குறியீடு செய்யப்படுகிறது. பதிலறிவிப்பை நான் 04.05.2018ல் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **பி.வா.சா.ஆ.3** என குறியீடு செய்யப்படுகிறது. பிவாசாஆ3ல் முழுவிபரங்களை தெரிவித்து பதிலறிவிப்பு கொடுத்துள்ள நிலையில் அதனை பொருட்படுத்தாமல் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தலைமையாசிரியராக பொருப்பான பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் அவர் மீது கலங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தலைமையாசிரியராக பொருப்பான பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் என்பதால் மோசடியாக ஆவணங்களை தயார் செய்து பணம் பறிக்கும் நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, வழக்கிற்கான எந்த வழக்கு மூலமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ1னது பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டு கையொப்பம் செய்யாத நிலையில் வழக்கானது நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 23.08.2018ல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண் 1 மயிலாடுதுறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் எந்தவொரு சம்மனும் சார்வாக வில்லை என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ1 தவறான தகவல்களைக் கூறி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதால் வழக்கானது நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.